1982 மார்ச் 9]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கதவு மூடப்படுகின்ற நேரத்தில் எல்லாம் இப்படிப்பட்ட இடைஞ்சல்கள் எல்லோருக்கும் வருவது வழக்கம், இயற்கை. இது போன்ற நிலைகளை எல்லாம் தவிர்ப்பதற்காக அரசு தீவிர நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. ரெயில்வே இலாகாவில் இதுபோன்ற பிரச்சினைகள் பல்வேறு இடங்களில் ஏற்படுகின்றன. காரணம், நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகக் கூட எங்கெங்கே லெவல் கிராசிங் வருகிறதோ, அங்கே எல்லாம் மேம்பாலம் கட்ட வேண்டும், அல்லது அடிமட்டப் பாலம் கட்ட வேண்டும் என்றெல்லாம் கேட்டால் உடனடியாக உத்திரவு கொடுப்பதில்லை. ஆகவேதான் இதுபோன்ற நிலைமைகள் ஏற்படுகின்றன.

ஊராட்சிகளுக்கு சலுகைவிலையில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம்.

*வினா எண் 431—திரு. இ. கணேசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சிகளுக்கு டெலிவிஷன் பெட்டிகளைச் சலுகை விலையில் அளிக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம், எனில், 1981—82 ஆம் ஆண்டில் எத்தனை ஊராட்சிகளுக்கு அப்பெட்டிகள் அளிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ஊராட்சிகளுக்கு ரூபாய் 1,000 மானியமாக வழங்கி 50 டி.வி. செட்டுகளை ஊராட்சிகளுக்கு அளிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆரணி ஊராட்சி ஒன்றியத்தில் பல பஞ்சாயத்துக்களில் பணம் இருந்தும் பஞ்சாயத்துத் தீர்மானம் போட்டும் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைப்பதற்குத் தடை இருப்பதாக அறிகிறேன். தடையைத் தவிர்த்து, தொலைக்காட்சி எங்கெங்கே வேலை செய்யுமோ, அங்கெல்லாம், சென்னையிலே இருந்து 125 கிலோ மீட்டர் வரையில் உள்ள அனைத்துப் பஞ்சாயத்துக்களிலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1982 மார்ச் 9

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, கடந்த ஆண்டிலேயே, இங்கே சென்னையிலேயிருந்து 100 கிலோ மீட்டர் தூரத்திற்கு உள்ளே உள்ள அத்தனை ஊராட்சி மன்றங்களுக்கும் டி.வி. செட்டுகளைக் கொடுப்பதற்கான திட்டத்தை இந்த அவையிலே நானே அறிவித்தேன். ஏறத்தாழ 910 டி.வி. செட்டுகள் கொடுப்பதன் மூலமாக, அதிலேயும்கூட ஒரு தன்னிறைவு ஏற்பட வேண்டுமென்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இப்பொழுது 50 டி.வி. செட்டுகளுக்கு மட்டுமே, ஒவ்வொரு டி.வி. செட்டுக்கும் ரூபாய் 1,000 மானியமாகக் கொடுக்கப்பட்டு வருகின்றது.

ஆனால், அத்தனை டி.வி. செட்டுகளையும் ஒரே சமயத்தில், ஒரே ஆண்டுக் காலத்தில் வைத்துவிடலாம் என்கின்ற யோசனை கூட அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. கண்டிப்பாக இந்த ஆண்டாவது முடிக்கலாமா என்பதுபற்றி நாம் விரைவில் நடவடிக்கை எடுப்போம்.

[முற்பகல் 9-40]

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டெலிவிஷன் செட்டு சென்னையில் இருந்து 100 கிலோ மீட்டர் தூரத்தில் கொடுப்பதாகச் சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்வது இதேபோன்று தஞ்சை மாவட்டத்தில் உள்ள கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள் பார்க்கக் கூடிய அளவுக்கு, ஊராட்சி மன்றங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திற்குக் கண்டிப்பாகச் செய்யவேண்டும். ஆனால் சென்னையின் தொலைக்காட்சி தஞ்சையில் தெரியாது என்று நான் நினைக்கிறேன். வேண்டுமானால் சிலோன் டி.வி. தெரியலாம். அது கூடத் தெரியுமா, தெரியாதா என்று தெரியவில்லை. இருப்பினும் இது குறித்துப் பரிசீலனை செய்யலாம்.

திரு. இரா. சண்முகம்: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஆயிரம் ரூபாய் மானியத்திலே தொலைக்காட்சி அளிக்கப்படுவதாகச் சொன்னார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் வாழ்கின்றவர்களுக்கு என்று தனியாக அறிவிக்கப்பட்ட ஊராட்சி மன்றங்களுக்கு முழு மானியம் கொடுத்து அந்த டெலிவிஷன் பெட்டிகள் அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ரூபாய் ஆயிரம் கூட மானியம் இல்லாமல் 75 சதவிதம் மானியமாகக் கொடுக்க வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டு வர இருக்கிறோம். அதுதான் பரிசீலனையில் இருக்கிறது.